திரு. எஸ். ராமசாமி : இந்த விஸ்தரிப்புத் திட்டம் எப்போது அமல் செய்யப்படும் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்போதுள்ள தகவலின்படி ஜெயங்கொண்ட சோழபுரத்தில் மருத்துவ மனை ஏற்படுத்துவதற்கு "டாப் பிரையாரிடி" கொடுக்கப்பட்டிருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன் : மருத்துவ மனைகள் ஏற்படுத்தி விட்டு, அதில் வேலை செய்யும் டாக்டர்கள், நர்சுக்கள் இவர்களுக்குக் குடியிருக்க வீட்டு வசதி இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இவர்களுக்கு வேண்டிய வீட்டு வசதியைச் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இப்போதுள்ள ஸ்கீம்படி மருத்துவ மனைகளில் வேலை செய்கின்ற டாக்டர்கள், நர்சுகள் இவர்களுக்கெல்லாம் வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதுதான். ஆனால் எமர்ஜென்ஸி காரணமாகச் சில திட்டங்கள் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. கனம் அங்கத்தினர் அவர்களுடைய தொகுதிகளில் இம்மாதிரி ஏதாவது கஷ்டங்கள் இருந்தால், அவற்றைப் போக்குவதற்கு கனம் அங்கத்தினர்கள் போன்றவர்கள் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : மருத்துவ மனைகள் ஏற்படுத்துகின்ற விஷயம் மக்களுக்கு மிகவும் முக்கியமாக இருப்பதால், தேசிய நெருக்கடியைப் பார்க்காமல் மருத்துவ மனைகளை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : எக்ஸ்டென்ஷன் செய்ய வேண்டியது, புதிதாகக் கட்டிக் கொடுப்பது போன்ற பல திட்டங்கள் எல்லாம் எமர்ஜென்ஸி காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் எது மிகவும் முக்கியம் என்பதைப் பார்த்து அவற்றிற்கெல்லாம் உடனடியாக, விரைவாக இல்லாவிட்டாலும், மெதுவாகவாவது திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று உத்தரவு போடப்பட்டுள்ளது.

போலி மருந்துகள்

*** 144 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கத்தார் நமது ராஜ்ஜியத்திலே விற்கப்படும் போலித் தன்மை வாய்ந்த மருந்துகளைப் பறிமுதல் செய்ய யோசனை தெரிவித்தார்களா ?

(இ) அப்படியானல், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (அ) & (b) : No special communication from the Central Government for confiscating spurious drugs sold in our State was received. The Drugs Controller, India has however asked the State authorities to check the quality of the products manufactured by certain firms and to report the details of the investigation to the Licensing

14th August 1963]

authority of the State concerned and to the Drugs Controller, India. Investigation has accordingly been made and certain stocks of ampoules have been frosen as per Section 22 of the Drugs Act.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், இம்மாதிரியான போலி மருந்துகள் எந்தெந்த இடத்திலிருந்து வந்தன? அப்படித் தயார் செய்த கம்பெனிகளின் பெயர் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : வெளி மாகாணத்திலிருந்து தான் இம்மாதிரி போலி மருந்துக்கள் வந்திருக்கின்றன. In the interests of public I do not want to reveal the names of those firms.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், அதிகமாக டிஸ்டில்ட் வாட்டரில் தான் இந்த போலிச் சரக்குகள் வருவதாகச் சொல்லப் படுகிறது. இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிருர்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இம்மாதிரியான போலி மருந்துகள் வராமல் இருப்பதற்கும், விற்பனையாகாமல் இருப்பதற்கும் எந்தெந்தத் தடுப்பு முறைகள் எடுக்க வேண்டுமோ அவைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. செ. மாதவன் : அம்பிஸ்ட்ரின் ஊசி மருந்து சமீபத்தில் சில பேர்களுக்குப் போடப்பட்டு ஒரு பெண் இறந்து விட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. அதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? அதன் பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அம்பிஸ்ட்ரின் போட்டதால் இறந்து போய் விட்டார் என்று சொல்ல முடியாது. சில பேர்களுக்கு இன்செக்ஷனில் அலர்ஜி இருக்கும். வேறு ஏதாவது காரணம் இருந்திருக்கலாம். அதை சாதாரணமாக எவ்வளவோ பேர்களுக்குப் போடுகிருர்கள். ஆயிரத்தில் ஒரு கேஸ் இப்படியிருக்கலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : எந்தெந்தக் கம்பெனிகளில் போலி மருந்துக்கள் கிடைத்தன என்பதைப் பொது நன்மையை முன்னிட்டு சொல்லக் கூடாது என்று சொன்னுர்கள். உயிரை மாய்க்கும் கொலை பாதகமான மருந்தைச் செய்யக் கூடியவர்களின் அட்டவணையைக் கொடுத்தால் என்ன தவறு ?

கனம் திருமதி ஜோதி வெங்கட்டாசலம் : போலி மருந்து எங்கெல்லாம் இருக்கிறதோ அதைக் கண்டுபிடித்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அவர்களை எமனுகக் கருதினுல் தப்பு.

திரு. மு. கருணாநிதி : அம்பிஸ்ட்ரின் ஊசி சம்பந்தமாக ஒரு பெண் இறந்த பிறகு அந்தக் கடையில் உள்ள ஊசி மருந்துகளை ஆயிரக்கணக்கில் தடை செய்து, விற்கக் கூடாது என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அது உண்மையா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : பர்டிகுலரா என்ன இன்ஸ்டன்ஸ் என்று கூறினுல் அதுபற்றித் தீவிரமாக ஆராய்ச்சி செய்து சரியான தகவல் கொடுக்க முடியும்.

[14th August 1963

திரு. எஸ். ராமசாமி : ஒரே நகரில் அல்லது ஒரே கிராமத்தில் இருக்கும் கடைகளில் மருந்துகளின் விலைகளில் மாற்றம் இருப்ப தால் மருந்துகளின் விலைப் பட்டியலைக் கடைகளுக்கு முன்னர் தொங்க விட ஏற்பாடு செய்யப்படுமா ?

MR. SPEAKER: This question relates to spurious medicines and not to the price of the medicines.

திரு. எஸ். ஜே. ராமசாமி : சென்ற ஆண்டு சென்னையில் ஒரு இடத்தில் காலி சீசாக்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகச் செய்தித் தாள்களில் பார்த்தோம். அது குறித்து கேஸ் போட்டு நட வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? எந்தக் கம்பெனி இதுமாதிரி செய்கிறது என்று ஒரு அறிவிப்புக் கொடுத்தால் டாக்டர்கள் உஷாராக இருப்பார்கள். அதையாவது செய்ய அரசாங்கம் முன் வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கட்டாசலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுகிற ஆலோசனை ஏற்கெனவே நடந்து கொண்டிருக் கிறது. இண்டரஸ்ட் ஆப் தி பப்ளிக்-ன் பேரில் நேம்ஸ் ஆப் போர்ம்ஸ்-ஐ சொல்ல மாட்டேன் என்று சொன்னேனே தவிர, வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : போலி மருந்துகளை உற்பத்தி செய்தார்கள் என்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதன் காரணமாக மூடப்பட்ட தொழிற்சாலை தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கட்டாசலம் : தனிக் கேள்வி போட் டால் சொல்ல முடியும்.

திரு. கே. ஏ. மதியழகன் : போலி மருந்துகள் விற்பதைப் போலவே உற்பத்தி செய்கிறவர்கள் திரை மறைவில் இருந்து பெரிய குற்றங்களைச் செய்வதால் உற்பத்தி ஸ்தானத்தைச் சோதனை செய்து அதைத் தடுக்க ஏதாவது வழிமுறைகள் இருக்கின்றனவா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. முனு ஆதி : முட்டைப் பூச்சி மருந்து குடித்துப் பலர் இறந்து போகிறார்கள். மனிதன் சாகாமல் எலி மட்டும் சாகும் படி அது உற்பத்தி செய்யப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மனிதன் அதைச் சாப் பிடக் கூடாது என்று, தற்கொலை செய்துகொள்ள நினைக்கிறவர் களைக் கண்டு பிடித்து பிரசாரம் செய்தால் நல்லதாக இருக்கும்.

Scholarships for poor students

* 145 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government are aware of the difficulties of the poor students studying in schools and colleges and who have applied to the Harijan Welfare Department for scholarship to pay the special and other fees; and